# இந்துசாதனம்.

(1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொலேவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ரு௬. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஐப்பசி௴ எ௳; (1924 அக்டோபர் 23) வியாழக்கிழமை. { இலக்கம்—ரு௧.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேழு
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கில கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானுற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி யிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீர [illegible]திப்பிள்ளை,
தந்திவிலாசம்:— தொண்டமானுறு.
றூபி. வல்லுவெட்டித்துறை. (H. 29.)

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.
25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஔஷதங்களென்றுதங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ளநாளும் மறவாதது.

பழனி, சி. எம். சாமி

## மகா வீரிய தங்க பஸ்பம்.

☞ வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுககும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுந்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சருமேகம், சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

## குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை, மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

## குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### கெர்ப்ப எண்ணை.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரோம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

### சர்வபடை நிவாரணி

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணு 8.

### பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.
வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
**சி. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி.

(Q. (B) 46)

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாறி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினுல் தருக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.

உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவாராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அநேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினுல் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினுல் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணுகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியம் தீரும்; வெட்டை, மூத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேக ஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுந்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, சுந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறுதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகழும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
**R. M. K. வேலுசாமிபிள்ளை,**
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y.. 31.)

## பிரகடனம்.

ஸீனியர் வகுப்புக்குரியவை. 1924.

நிரைமீட்சிச்சருக்கம்: வில்லிபுத்தூரர் பாரதத்துள்ள இச்சருக்கம் பதவுரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்பு, நூலாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம் முதலியவற்றுடன் விலை சதம் 75. (அணு 12.)

திருக்குறள் முதற்பத்ததிகாரம்: இப்பத்ததிகாரங்களும் தெளிபொருள்விளக்கப் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, திருவள்ளுவர் சரித்திரச் சுருக்கம் என்னுமிவற்றோடு விலை சதம் 50. (அணு 8.)

பெண்கல்வி; மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய இந்த அரிய வியாசம் திருத்தியும் புதுக்கியும் அரும்பதவிளக்கத்தோடு சுத்தப்பதிப்பாக வெளிவந்துள்ளது. பெண்கள்படிக்க வேண்டியது விலை சதம் 85. (அணு 14.)

ஜூனியர் வகுப்புக்குரியன. 1924.

நாலடியார் முதற் 15அதிகாரம்: இப்பதினைந்ததிகாரங்களும் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, ஆங்கிலமொழிபெயர்ப்பு என்னுமிவைகளுடன் விலை சதம் 75.

சிசுபாலசரித்திரம்: விலை சதம் 50. (அணு 8.)

மற்றும் நூல்கள்.

மயானகாண்டம்: ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திரபுராணத்துள்ள இக்காண்டம் பொழிப்புரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்புமுதலியவற்றுடன் 2ம்பதிப்பு. தமிழ் 7ம் 8ம் வகுப்புகளிற் கல்விபயிலும் மாணாக்கருக்குச் செய்யுட்பாடமாகஉபயோகிக்கப்படுவது. விலை சதம் 50.

கதிரையாத்திரைவிளக்கம்: கதிர்காமயாத்திரை அனுபவத்தையும் கதிர்காமவேலவர் திருவருட் பெருமையையும் கொண்டிச்சிந்து நடையிற் கூறுவது. ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்பாடிய கதிர்காமவேலவர்கீர்த்தனம், பரமானந்தப்புலவர் பாடிய நல்லைக் கந்தர கீர்த்தனம், அகவல்என்னுமிவைகளுடன். விலைசதம்25.

சிவராத்திரிவிரதமான்மியம்: சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும் முறையையும் அனுட்டித்தோர் பெற்ற பேறுகளையும் பிறவற்றையும் வசனநடையிற் கூறுவது. தோத்திரப்பாக்களுடன் விலை சதம் 10. (அணு 2.)

அதிகமாக வாங்குவோருக்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும். ஒரு ரூபாவிற்குக் குறைந்த புத்தகம் V. P. மூலமாக அனுப்பப்படமாட்டா.

Apply to
Pandit V. T. SAMBANDHAN,
Jaffna Hindu College,
Vannarpannai.

(Q. 50)

நமது பத்திரிகை.

தீபாவலித் திருநாளின் பொருட்டு இந்துசாதனக் காரியாலயத்திலுள்ளவர்கட்கு விடுதலை உதவப்படுதலால் நமது பத்திரிகை வருகிற திங்கட்கிழமை வெளிவராது அடுத்தவியாழக்கிழமையே (30-10-24) வெளிவருமென்பதைப் பத்திரிகாபிமானிகட்கு அதி வி நய த் தோடு தெரிவிக்கின்றேம்.


# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சிஞு ஐப்பசிமீ 7உ வியாழக்கிழமை.


## தலையைச் சுற்றியே மூக்கைத் தொடுகிறேம்.

நாம்வசிக்கும் இவ்வியாழ்ப்பாணம்இலங்கையின் அதி வடக்கேயுள்ள ஒரு குடாநாடாகும். இதற்கும் இந்திய தென்கரைக்கும் இடையிலுள்ள கடலின் தூரம் முப்பத்து மூன்று மைல் வரையிலாகும். இது அக்காலங்களில் ஊர்காவற்றுறை வல்லுவெட்டித்துறை காங்கேயன்றுறை பருத்தித்துறை என்னும் நான்குதுறைகள் வாயிலாக இந்தியாவுடன் நித்தியபோக்குவரவுடையதாய் விளங்கியது. இங்கிருந்துவியாபாரநிமித்தமாகவும்யாத்திரையின்பொருட்டும் இந்தியாவுக்குச் செல்வோ ரனைவரும் இத்துறைமுகங்களிலேயே தோணியேறிப் போக்குவரவு செய்துவந்தனர். வளமான காற்று வீசுங்காலங்களில் நான்கு மணிநேரத்திலும், சாதாரணமாகக் காற்று வீசுங் காலங்களில் ஐந்துமணி நேரத்திலும், எதிர்காற்றுக்காலங்களில் ஏழு அல்லது எட்டு மணி நேரத்திலும் அக்காலத்தில் அக்கரை செல்வர். ஒருவருடைய பிரயாணச் செலவும் எ ழு ப த் தி ர ண் டு சதமாகும். இப்பிரயாணத்தில் கஷ்டமுமில்லை; பணச்செலவும் அதிகமில்லை; கட்டுச் சாதமும் வேண்டியதில்லை. தென்னிந்திய அந்தத்திலுள்ள ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வோர் ஐந்துரூபாவுடன் சென்று மீள்வர். அக்காலத்தில் இங்குள்ளவர்கள் கடலுக்கப்பாலுள்ள தென்னிந்தியாவைப்பற்றி நன்கறிந்திருந்தார்களன்றி இலங்கையிலுள்ள கோழும்பு கண்டி காலி முதலான இடங்களைப்பற்றி நன்குணராதிருந்தனர். அறிந்திருக்கவேண்டிய ஆவசியகமும் அப்போது இருந்ததன்று.

காலகதியில் எமது காருண்ணிய அரசினர் மேற்சொல்லப்பட்ட துறைமுகங்கள் வாயிலாகப் பிரயாணிகள் இறங்குதலைத்தடுத்துவிட்டனர். இந்தியாவை இடையிடையே கொள்ளைகொள்ளும் கொள்ளைநோய் முதலியன எம்மைக் கொள்ளைகொள்ளாதபிரகாரம் காவல் செய்கிறேமென நியாயம் கூறினர் இது மிகவும் பொருத்தமற்றதாகும். அதன்பின் நம்மவர்கள் மண்டைதீவு காங்கேசன்றுறை பருத்தித்துறையென்னு மிடங்களிலிருந்து புகைக்கப்பல் மார்க்கமாகப் புறப்பட்டுப் பாம்பனிலிறங்கி இந்தியாவுக்குப் போய் மீண்டுவந்தனர். இத்துறைமுகங்களிலிருந்து பாம்பனுக்குப் போய்ச் சேரப் பதினெட் டிருபது மணி நேரமாகும். பாம்பனிலே கப்பலிலிருந்து வள்ளத்திலேறிக் கரையிற் போய்ச் சேர இரண்டுமணிநேரமாகும். காற்றினுல் இயக்கப்படும் பாய்த்தோணி மார்க்கமாக ஐந்துமணிநேரம்வரையிற் சென்றடைந்த இந்தியகரையை, எழுபத்திரண்டுசதத்துடன் சென்றடைந்த பாரதகண்டத்தை அதிவேகமாக ஓடும் புகைக்கப்பல்மார்க்கமாகப் பதினெட் டிருபதுமணி நேரத்தில் ஐந்து அல்லது ஆறுரூபாசெலவுசெய்து போய்ச் சேரவேண்டி நேர்ந்தது.

அதன்பின் வடபாகப் புகைரத வீதி அமைக்கப்பட்டது. மதவாச்சியி லிருந்து மன்னருக்கும் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது தலைமன்னாரிலிருந்து புகைக்கப்பல்மார்க்கமாகத் தனுக்கோடியிற் போய் இறங்கவேண்டிவந்தது. இதுவே இப்பொழுது நாம் இந்தியாவுக்குப் போகவேண்டிய மார்க்கமாகும். இப்பொழுது இந்தியாவிற்குப் பிரயாணஞ்செய்வோர் பிற்பகல் நாலுமணிவரையிற் காங்கேசன்றுறையிலிருந்து புறப்படும் புகைரதமார்க்கமாகச் செல்லுதல் வேண்டும். தலைமன்னார் வரையிற் பிரயாணஞ் செய்வதற்குக் கிரயம் (மூன்றும் வகுப்புக்கு) ருபா ஆறரைவரையிலாகும். புகைரதம் அடுத்தநாட் காலை ஏழுமணிவரையில் தலைமன்னருக்குப் போய்ச் சேரும். இடையிலுள்ளதாகிய மதவாச்சிச் சந்தியில் ஒருமணி நேரமுதல் ஒன்றரை இரண்டுமணி நேரம் வரை தங்குதல்வேண்டும். தங்கவேண்டிய நேரமோ அர்த்தசாமம். இடமோ காட்டுக் காய்ச்சலுக்குப் பேர்போனது. அந்த இடத்தில் அந்தநேரத்தில் பிரயாணிகளுக்குப் பேரிடர் விளைப்பன பனியும் குளிரும் மழையுமேயாம். ஒருவாறு ஒதுங்கியிருக்கத்தானும் இடம் கிடையாது. தலைமன்னாரிலிருந்து புகைக்கப்பல்மார்க்கமாகத் தனுக்கோடிக்குப் போய்ச் சேர மூன்றுமணி நேரத்துக்கு அதிகமாகும். மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் அங்கு இறங்கியவுடன் துறைமுக அதிகாரிகள் பரிசோதனை செய்யும்பொருட்டு அவர்களை ஓர் பெரிய மண்டபத்திற்குக் கொண்டுபோவர். பரிசோதனை முடியவும் நான்கு அல்லது ஐந்துமணித்தியால நேரமாகும். ஆகவே பிற்பகல் நாலுமணிக்குப் புறப்பட்டவர்கள் மறுநாள் நாலுமணிக்குப் பின்பே இந்தியகரையிற் பிரயாணஞ் செய்யக்கூடியவராவர். இப்பிரயாணத்துக்கு இருபத்துநான்கு மணித்தியாலம்வரையில் வேண்டியதாகும். செலவும் பதினேருரூபாவிற்கு மேலாகும். கஷ்டங்களும் அதிகமாகும்.

ஐந்துமணிநேரத்திற் பிரயாணஞ்செய்த நாம், எழுபத்திரண்டு சதத்துடன் பிரயாணஞ்செய்த நாம், கட்டுச்சாதமும் கஷ்டமுமில்லாது பிரயாணஞ்செய்த நாம் இப்பொழுது வலதுகையினுல் மூக்கைத் தொடுவேதற்கு அக்கையை மேலே உயர்த்தி வலது காதைத் தொட்டு, பிடர்ப்பக்கமாகச் சுற்றி, இடதுகாதைத் தொட்டு, அதன்பின் அதிக சிரமத்துடன் மூக்கைத் தொடுவேதுபோல, புகைரத மார்க்கமாக மதவாச்சிக்குச் சென்று அங்கு அதிக கஷ்டப்படவும், பின்னர்த் தலைமன்னருக்குப் புறப்பட்டுச் செல்லவும், புகைக் கப்பலிற் செல்லவும், தனுக்கோடியில் துறைமுகப்பகுதியாருடைய பரிசோதனையின்பொருட்டு அதிகநேரம் பசி பட்டினி கஷ்டம் பொருட்செலவு முதலானவற்றுடன் சிறைப்படுத்தப்படவும் வேண்டியவர்களானேம்.

எமது காருண்ணியஅரசினர் எமக்களித்த இச்சிலாக்கியம் எம்மை மிகவும் இடர்ப்படுத்துவதாகும். ஆபிரிக்காவைச் சுற்றி வருதலினுல் அதிகநாள் வீணுகுமென்றும், பெரும் பொருட்செல வுண்டாகுமென்றும் தீர்க்காலோசனைசெய்து, கோடிக்கணக்கான ருபா செலவுசெய்தும், அதிக காலம் சிரமப்பட்டும் சுவெஸ் கால்வாயை வெட்டுவித்துப் பெரு நன்மையடைந்த எமது காருண்ணிய அரசினர் எமக்கு இவ்வித சிலாக்கியம் செய்தமை மிகவும் விநோதமானதாகும். நேர் விரோதமானதுமாகும். இந்தியாவிலுள்ள கொள்ளைநோய் இங்கு வராதபிரகாரம் இவ்வித கட்டுப்பாடு செய்தாரேனில் தலைமன்னார் மார்க்கமாக இங்கு வரும் கொள்ளை முதலான நோய்களுக்கு என்செய்வது? கோழும்பு கண்டி முதலான இடங்களில் கொள்ளை நோய் தோற்றியது இந்தியாவுக்குப் புகைரதமார்க்கமாகப் போக்குவரவு நிகழ்ந்த பின்புதானே. அதற்குமுன் கொள்ளைநோய் இலங்கையில் தாண்டவமாடியதாக நாம் அறியேம். இங்கிலாந்து அமேரிக்கா ஜேர்மனி முதலான தேசங்களிலிருந்து இங்கு கொண்டுவரப்படும் மோட்டர் ரதங்களினுல் நேரும் "அள்ளுகொள்ளை" நோய் இலங்கையில் வ ர வ ர அதிகரித்துவருகின்றதே. இதைத் தடுப்பதற்கு அரசினர் என் செய்தனர்? ஏதுஞ் செய்திருந்தால் வரவர அதிகரிப்பதற்குக் காரணமென்ன? ஏன் மௌனஞ் சாதிக்கின்றனர்? பணம் தமது மேல்நாடுகளுக்குப் போய்ச் சேருகின்றதென்னும் பெரு மகிழ்ச்சிதானே காரணமாகும்.

அரசினர் யாழ்ப்பாணத்திலுள்ள துறைமுகங்களில் ஒன்றையேனும் இந்திய பிரயாணத்தின்பொருட்டு அமைப்பரேல் அது எம்மனோர்க்குப் பெரும் பேறுடையதாகும். புகைரத வருவாய் முதலியனவற்றின்பொருட்டு நாம் மிகுந்த கஷ்டங்களுக்கும், அதிக பொருட்செலவுக்கும், சகல வசதியீனங்களுக்கும் ஆளாதல் முறைமையுமன்று! தருமமு மன்று!.

### வைசூரி.

அம்மைநோய் எனப்படும் வை சூ ரி யாழ்ப்பாணத்திற் சிற்சில இடங்களில் உற்பத்தியாயிருக்கின்றது. வண்ணார்பண்ணையைச்சேர்ந்த கொட்டடியில் மூவர் இந்நோய்வாய்ப்பட்டனர். அவருள் ஒருவர் இறந்துபோயினர். நாவாந்துறையிலும் ஒருவருக்கு இந்நோய் கண்டிருப்பதாக வதந்தி பிறக்கின்றது. பறங்கிதெருவிலும் சுதுமலையிலும் வைசூரிநோய் தோன்றியிருப்பதாக அறியலானேம். அரசினரும் ஊரவர்களும் இந்நோய் பரவாவண்ணந் தடுத்தற்கான வழிகளை அனுசரித்தல் வேண்டும். வீட்டுத் தொல்லைகள் ஒழுங்கைகள் தெருவீதிகள் முதலிய இடங்களிலுள்ள குப்பைகளெல்லாம் நன்றாய்க் கூட்டித் "தார்"ஊற்றி எரித்துவிடப்படல் வேண்டும். பற்றைகள் செடிகள் அனைத்தும் வெட்டிப் புதைக்கப்படல்வேண்டும். இல்லையேல் த கி க் க ப் படல்வேண்டும். கிணறுகளை நன்றாக இறைத்துச் சுத்தி செய்துகொள்ளுதல்வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் வீடுவாசல்களைக் கிரமமாகப் பெருக்கி, கழுவவேண்டிய இடங்களைக் கழுவியும் மெழுகவேண்டியவற்றை மெழுகியும் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் நன்றும். வேப்பம் விறகுடன் வேப்பம்விதையுங்கலந்து தீமூட்டிப்புகைத்தல் இதனைத்தடுத்தற்கு ஒருவழியாகுமென்று அனுபவமுடையோர் சொல்லுகின்றனர். பழஞ்சாதம் பழங்கறி இலகுவிற் சீரணமாகாத உணவு மீன் இறைச்சி முதலியவற்றை உண்ணுது விலக்கிவிடுதல்வேண்டும். மகாமாரி வைரவர் வீரபத்திரர் முதலிய தெய்வங்கட்கு விசேஷ அபிஷேகம் ஆராதனை உற்சவம் செய்வித்து வழிபடுதல்வேண்டும். அம்மைநோய் நடக்கும் கிராமங்கட்கும் சனக்கூட்டமான இடங்கட்கும் இயன்றவரையிற் போகாது தவிர்த்துக்கொள்ளுதல் நன்றும்.

### தீபாவலி.

வருகிற திங்கட்கிழமை தீபாவலியெனப்படும் நரக சதுர்த்தசித்திருநாள் நிகழும். அச்சமையத்தில் சைவ வைஷ்ணவ சமயிகளெல்லாரும் வைகறையிலெழுந்து அப்பியங்கன ஸ்நானஞ்செய்து கோடிவஸ்திரந் தரித்து நித்தியா னுஷ்டானம் முடித்து ஆசாரசீலராய்த் தூயசிந்தையுடன் ஆலயஞ்சென்று கடவுள்வழிபாடு செய்தல்வேண்டும். ஏழைகளுக்கு வஸ்திரம் எண்ணெய் அரப்பு என்னுமிவைகளைத் தானஞ்செய்தல்வேண்டும். எல்லோரும் தூய உணவருந்துதல்வேண்டும். இவ்வனஞ்செய்தலையொழித்து இப்புண்ணியதினத்தில் மதுபானஞ்செய்தல் புலாலருந்தல் சூதாடுதல் முதலிய தீக்கருமங்களில் ஈடுபடுதல் குளிக்கப்போய்ச்சேற்றைப் பூசிக்கொள்வதையொக்கும். கோடியுடுக்கும் அன்பர்கள் கதராடையையேனும் நமது நாட்டில் ஆக்கப்படும் வஸ்திரத்தையேனும் இயன்றவரையில் அணிந்துகொள்வது உத்தமமாகும்.

### சூதாடல்.

மதுபானம் ஒருவாறு குறைந்துவர, இங்கே சூதாடுதல் அதிகரித்துவருகின்றது. பள்ளிக்கூட மாணவர் சுருட்டுத் தொழில் செய்யுஞ் சிறுவர் ஆகிய இவர்களும் தங்கள் கருமங்களை அலட்சியஞ் செய்து இக்காலத்திலே சூதாட்டத்தில் ஈடுபட்டு நாசமடைகின்றனர். சூது தன்னை ஆடத் தொடங்கியவனை இலகுவில் விட்டு நீங்காது. நளன் தருமபுத்திரர் என்னும் அரசர்களே சூதாடப் புகுந்தமையினுற் பல இன்னல்களுக்கு ஆளாயினரெனின் சாமானிய சனங்களிடத்தில் இத்துர்க்கிருத்தியம் குடிபுகின் எத்துணையிடரை விளைக்குமென்பதையிட்டு நாம் சொல்லவும் வேண்டுமோ! கொலை களவு முதலிய மகா பாதகங்கட்கும் வறுமைக்கும் சூது காரணமாகும். இதுபற்றியே "சூது விரும்பேல்" என்றும், "சூதும் வாதும் வே த னை செய்யும்" என்றும், "இருமனப்பெண்டிரும் கள்ளும் கவறும் திருநீக்கப்பட்டார் தொடர்பு" என்றும், "வெற்றிநளன் சூதாடி வீடுவிட்டுக் காடுறைந்தான், சிற்றிடையுந் தானுஞ் சிவசிவா......." என்றும் ஆன்றோர் இச்சூதைக் கடிந்துள்ளனர். சுருட்டுத்தொழில் செய்யுஞ் சிறுவர் சிலர் தாம் பாடுபட்டு அரிதில உழைத்த பொருள் முழுவதையும் சூதாட்டத்தின்பொருட்டுத் துர்விநியோகஞ் செய்து, அப்பொருள் போதாமைகண்டு தங்கள் ஏழைப் பெற்றோரை அணுப்பி வருத்திப் பொருள் பறித்துச் செல்கின்றனர். அரசினர் சூதாடுவோரைப் பிடித்துத் தண்டித்தற்கான பிரமாணத்தை விதித்துள்ளனரேனும், அநேகர் அத்தண்டனைக்கு ஆளாகாது தப்பிக்கொள்ளுகின்றனர். நாடு நாடு நன்மையடையவேண்டில் இச்சூதாகிய மாபாதகத்தை அறவே யொழித்தற்கான வழிகளை யனுசரித்தல்வேண்டும்.

### உலகம் பலவிதம்.

பாண்டவரும் நூற்றுவரும் குருகுலவாசம் செய்து கல்விகற்கும்பொழுதே பகைமை பூணலாயினர். அருச்சுனனும் கன்னனும் புலியும் பசுவும்போலாயினர். வீமனும் துரியோதனனும் நாயும் பூனையும்போலாயினர். ஏனையோரும் தம்முள் வி ரோ த ம் பாராட்டுவாராயினர். இக்தருணத்தில் திரௌபதியின் சுயம்வரமும் நிகழ்ந்தது. இதனுலும் பகை அதிகப்பட்டது. பின்னர் இராயசூயயாகம் செய்யவேண்டியதாயிற்று. இதற்காக ஐம்பத்தாறு தேசத்து அரசரையும் வென்றனர். யாகாரம்பம் செய்யப்பட்டது. துரியோதனன் கன்னன் என்னும் இருவருக்கும் மனம் மாறுபட்டது. பொறாமை உதித்தது. யாகத்தை இடர்படுத்த வேண்டி யோசனைசெய்ய உத்தேசித்தனர். தருமபுத்திரர் சகல கருமங்களையும் தீர்க்காலோசனை செய்து தொடங்குபவராகவினுலும், பின் விளைவனவற்றை யூகித்து அறியக்கூடியவராதலினுலும் துரியோதனன் கன்னன் என்னும் இருவரிடத்தும் சந்தேகமுறலாயினர். அவர் துரியோதனனிடம் சென்று "தம்பி நாம் நாரதமுனிவருடைய கட்டளைப்படி இராசசூயயாகம் செய்யத் தொடங்கிவிட்டோம். உன்னுடைய துணைகொண்டுதான் யாகத்தை நிறைவேற்றவேண்டியிருக்கிறது. ஐம்பத்தாறு தேசத்தரசராலும் கொடுக்கப்பட்ட திரவியம் மலைமலையாகக் குவிந்திருக்கிறது. அதன் பொறுப்பை ஏற்று அங்கு நடைபெறவேண்டிய கருமங்களைச் சிறப்பாக நடத்துவதற்கு நீயே தலைமை வகிக்கவேண்டும்" என்று இன்மொழி கூறினர்.

* * *

புகழேந்தியாகிய துரியோ த ன னிடமுள்ள பொறாமை நீங்கியது. கவலை ஒழிந்தது. "யார் யாகத்தை எவ்விதமாகச் செய்யினுமென்? 'நான்'தானே எக்கருமத்திலும் தலைமை வகிக்கவேண்டி யிருக்கிறது. இந்த அதிகாரம் ஒ ன் று மாத்திரமே எனக்கு வேண்டியது" எனத் தன்னுள் எண்ணிக்கொண்டு பின் விளைவதை உணராதவனுய்த் தனது தலைமை உத்தியோகத்தைச் சிரத்தைபூண்டு நிறைவேற்றுவானுயினன். த ரு ம புத்திரர் கன்னனிடஞ் சென்று "கொடையிற் சிறந்த அண்ணலே! யாகத்தின்பொருட்டு மதித்தற்கரிய திரவிய மிருக்கிறது. அதனைத் தக்கபடி கொடுக்கும் ஆற்றல் என்னிடத்தின்று. யாகத்திற்காகக் கொண்டுவரப்பட்ட திரவியங்களை அவரவர் தகுதிக்குத் தக்கபடி நீயே கொடுத்தல் வேண்டும். இன்றேல் யாகம் சிறப்புறமாட்டாது" என்றுர். கனவிலும் நனவிலும் கொடையிலேயே கருத்துடையவனுகிய கன்னன் தனக்குப் பெரும்பேறு கிடைத்ததென நினைத்தான். யாகத்திற்கு இடர் விளைக்க வேண்டுமென்று முன்னெண்ணிய எண்ணங்களை அறவே யொழித்தான். யாகசாலையிலுள்ள திரவியங்களைச் சு ற் றி ப் பார்த்தான். "நான் செய்த தவமே தவம். இங்குள்ள திரவியம்முழுவதையும் நானே கொடுப்பதானுல் அதுவே எனக்குப் போதுமானது" எனக் கூறித் தனது உத்தியோகத்தைக் கையேற்றுச் சிறப்பாக நடத்துவானுயினன்.

* * *

யாகம் சிறப்பாக நடைபெற்றது. நூற்றுவரும் கன்னனும் தமது மாளிகை சேர்ந்தபின் யோசனை செய்வாராயினர். இயல்பாயுள்ள பொறாமை உதித்தது. கன்னனுடைய வயிறு எரியத் தொடங்கியது. "தருமன்மா மதலைபெற்ற, மேதகு வேள்விச்செல்வம் வேந்தரில் யார்பெற்றுர்கள்" என்றனர்; "ஏதளவவன்றன் வாழ்க்கைக்கு" என்றனர்; "இனியவன் சின்னுட் செல்வினெம்மனோர்வாழ்வுங் கொள்வன்" என்றனர். ஒருவர் பிரவேசிக்குங் கருமத்துக்கு இடையூறு விளைக்கத்தகுந்த ஆற்றலுடையவர்களைத த ன் வ ச ப் படுத்தும் மேற்சொல்லப்பட்ட த ந் தி ர முறைமை இக்காலத்திலும் அருமையாக அனுசரிக்கப்பட்டுவருகின்றது. அறிவுடையோர், காலதேச வர்த்தமானங்களை நன்குணர்ந்தோர், கருமமே கண்ணுயினோர் முதலியோர்புகழைவிரும்பினோரைப் புகழ்ந்தும், பொருளை விரும்பினோர்க்குப் பொருளுபகரித்தும், கௌரவத்தை விரும்பினோர்க்குக் கன்னிபமீய்த்தும், அதிகாரத்தை விரும்பினோர்க்குமேலான பதவிகளைக்கொடுத்தும் தமது கருமத்தை நிறைவேற்றிவிடுவர்.

* * *

இந்த வலையில் அகப்பட்டோரிற் சிலர் உடனே தமது தவறை உணர்ந்துகொள்வர். சிலர் தம்மைச் சேர்ந்தவர்களுடன் யோசனைசெய்து நாணமுறுவர்; சிலர் ஒன்றுஞ் செய்ய முடியாதவர்களாய்த் தியங்குவர். சிலர் கன்னனையும் துரியோதனனையும்போலத் தாமே அக்கருமத்துக்கு

இன்றியமையாத உதவிபுரிந்து அஃது கருமம் நிறைவேறியபின் மனம் அழன்று, வயிறெரிந்து கொதிப்பர். சிலர் இதை வல்லமை நன்கு யோசனைசெய்து வாளாவிருப்பர். சிலர் தமது தொடர்பு முழுவதையும் நீக்கிக்கொள்வர். சிலர் தீர்க்கதரிசனங் கூறுவர். சிலர் கோடரிக்காம்பனையாருடைய செயல்களைக்கண்டு தமது நுட்ப அறிவினால் மகத்துவமான முறைகளைக்கைப்பற்றியும், ஏனையோர்க்கு நேரும் அவமானத்தை நினைந்து மனம்வருந்தியும், ஒரு மயிர் நீங்கின் உயிர்வாழாத கவரிமான்போன்று தம் மானம் காப்பர். கல்வியறிவும், கால தேச வர்த்தமான உணர்ச்சியும், உலக அனுபவமும் உணர்ந்த ஒருவர் இருவரே எக்கருமத்தையும் நன்குணர்ந்தோராவர். இவர்களே நல்லவழியிற் செல்வோராவர். இவர்களைப் பின்பற்றுதலே சிறப்புடைத்தாகும்.

## ச மா சா ர ம்

### காலநிலை.

நேற்று ஒருபாட்டம் மழை பெய்தது. மழையின்றி வாடிய பயிர்கட்கு இம்மழை யமிர்தமாம். இன்றும் மழை பெய்கின்றது.

### கௌரவப்பட்டத்தின் காலபலன்.

இலங்கையிலுள்ள சட்டநிருபணசபை அங்கத்தவரின் "கௌரவ" ப்பட்டத்தை நீக்கிவிட வேண்டுமென ஓர் பிரேரணையை, கௌரவ மிஸ்டர் ஜோர்ஜ் டி. சில்வா என்பவர் அஃது சபையிற்பிரேரிக்கப்போகின்றாரென அறியலானேம்.

### காரைநகர்ச் சைவ மகாசபை.

இச்சபையின் ஆதரவின்கீழ் நிகழும் இரக்தாக்ஷி௵ ஐப்பசிமீ 2௳ (18-10-24) சனிக்கிழமை இரவு ஆறுமணியளவில் களபூமித் திக்கரை முருகமூர்த்திகோயில் மண்டபத்தில் ஸ்ரீமத் சி. சுப்பிரமணியதேசிகர் அவர்களால் "மானுடப்பிறவியின் பேறு" என்னும் விஷயமாகச் சிறந்த பிரசங்கஞ் செய்யப்பட்டது.

### மானிப்பாயிலே கள்ளில்லாமல் அவதிப்படுகிறார்கள்.

மானிப்பாயிலும் சங்குவேலியிலுமுள்ளவர்களாகிய 700 பேர் தங்களுக்குக் கள்ளுத்தவறணை ஆவசியகம் வேண்டுமென வடமாகாண ஏசன்றரவர்களுக்கு விண்ணப்பம் செய்திருக்கின்றனர். அங்கு முன்னுள்ள கள்ளுத்தவறணை இற்றைக்கு நாலுவருடங்களுக்குமுன் நீக்கப்பட்டது. இவர்கள் கொண்டுள்ள அபிமானத்திற்கென்னென்பேம்.

### சங்கீத கதாப் பிரசங்கம்.

சங்கரசுப்ரமண்ய சச்சிதானந்த ராஜயோகிகள் இந்த ஐப்பசிமீ 9௳ (25-10-24) சனிக்கிழமை மாலை ஆறுமணி தொடக்கம் ஊரெழுச் சைவபாலிய சங்கத்தாருடைய வேண்டுகோளின்படி அஃது ஊர்ப்பிள்ளையார்கோயில் மண்டபத்திலே அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவராகிய சண்டேச நாயனாருடைய திவ்விய சரித்திரத்தைப் பக்கவாத்திய சந்தமாகப் பிரசங்கம் செய்வார்கள்.

### இரக்கமில்லாத வண்டிக்காரனுக்கு நல்ல பாடம்.

அன்னுங்கையிலே வண்டிக்காரன் ஒருவன் வண்டியிற் பூட்டியமாடு விழுந்துகிடந்தபொழுது அதன் கண்களுக்கு மிளகாயை அப்பினனென மிருகஹிம்சை நிவாரண சங்கப்பரிசோதகர் ஸ்ரீ இ. வேலுப்பிள்ளையவர்களால் தொடரப்பட்ட வழக்கு இன்று யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் விசாரணைசெய்யப்பட்டது. எதிரி குற்றவாளியாகக்காணப்பட்டு 25 ரூபா அபராதம் அல்லது இரண்டுவாரச்சிறை விதிக்கப்பெற்றான்.

### மகன் தந்தைக்குச்செய்த உதவி.

சிலாபத்திலே உவில்லியம் என்னும் சிங்களவன் ஒருவன் குடிவெறியினால் தன் பிதாவினுடைய வீட்டிற்குச்சென்று 69 வயதுள்ள தந்தையைப் பயமுறுத்தித் தனக்குப்பணம் கொடுக்கும்படி கேட்டான். அவனுடைய பிதா அவன்மேற் கோபங்கொண்டு அவனை வெளியே போகும்படி கட்டளை யிட்டான். உவில்லியம் என்பவன் தன்னிடமிருந்த கத்தியினால் தன்பிதாவைக் குத்திக் காயப்படுத்தினான். இவ்வழக்குச் சிலாபப்பொலிஸ்கோட்டில் விசாரணைசெய்யப்பட்டு எதிரி 50 ரூபா அபராதமும் ஆறுமாத நன்னடத்தைத் தீர்ப்பும் விதிக்கப்பெற்றான்.

### இப்பொழுதுதானும் இருக்கிறது.

கல்குத்தாப் பொலிஸ்கோட்டுலிகிதராயிருக்கும் மிஸ்டர் ஜகுப்ஷாம் ஷாஹ் அலம் என்பவரின் மைத்துனரைச் சென்ற 9 வருடமாகக் காணவில்லை. அவருடைய சுற்றத்தவர் அவர் இறந்துவிட்டாரென முடிவு செய்துவிட்டனர். இறந்தகாலத்திலுள்ள விஷயங்களை ஞானதிருஷ்டியினால் அறிந்துகொள்ளும் ஆற்றலுடைய நிபுணரொருவர் மிஸ்டர் ஷாப்ஷாலே யோகத்திலிருக்கச்செய்து அவருடைய மைத்துனர் இங்கிலாந்திலே "லென்ற்" என்னுமிடத்திலிருந்து தொழில் செய்து சிறப்பாக வாழ்ந்துவருவதை உணரும்வண்ணம் செய்தனர். அதன் உண்மையை அறியும்பொருட்டு இங்கிலாந்துக்குத் தந்திசமாசாரம் விடுக்கப்பட்டது. அவர் அங்குச் சுகமாக வாழ்ந்துவருவதாகப் பதில் கிடைத்தது. நமது முன்னோர்களின் அரிய ஞானயோகங்களைக் கட்டுக்கதையெனக் கூறுவோர் இதனைச் சிந்திப்பார்களாக.

### விவாகம்.

கொலன்பானைக் கணித்தாயுள்ள யாப்பத்தைத்தோட்ட லிகிதராயிருப்பவரும் ஸ்ரீ வே. செல்லையா அவர்களின் புத்திரருமான ஸ்ரீ முத்துத்தையா அவர்களுக்கும் வளாலை ஸ்ரீ இலையதம்பியவர்களின் புத்திரி ஸ்ரீமதி தங்கம்மாவுக்கும் இந்த ஐப்பசிமீ 1௳ வெள்ளிக்கிழமை இரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று இனிதுவாழும்வண்ணம் கதிர்காமவேலவர் திருவருள் முன்னிற்பதாக. சுபமஸ்து. —கடிதம்.

### நூல்களைப்பற்றிய குறிப்பு.

**சுத்தாத்துவிதசைவசித்தாந்ததத்துவப்படம்.**

இது தமிழ் சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளிற் சிறந்த வித்துவானும் சைவசித்தாந்த சாஸ்திரங்களை நன்குணர்ந்தவருமாகிய (காலஞ்சென்ற) காசிவாசி செந்திநாதையரவர்களால் வரையப்பெற்றது. சைவசமயிகள் ஒவ்வொருவரும் இதனைத் தமது கிருகத்தில் வைத்துப் போற்றத்தக்கது. இதன் விலை ரூபா 3. இப்படமும் ஐயரவர்கள் செய்த ஏனைய அரிய நூல்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தெல்லிப்பழை பிரமஸ்ரீ வி. இரத்தின சபாபதி ஐயரவர்களிடம் பெறற்பாலன.

**செந்தமிழ்ச் சிந்தாமணி.**

இது சென்னையிலிருந்து வெளிவரும் ஒரு சிறந்த மாதாந்தப் பத்திரிகையாகும். இதில் உண்மை, சரித்திர உணர்ச்சி, கல்வியே கருத்தனம், தமிழின் சிறப்பு, கணித சாஸ்திரம், வான சாஸ்திரம், இல்லறவொழுக்கம், மாணவ தருமம் முதலான அரிய விஷயங்கள் இனிய செந்தமிழ் வசனநடையில் எழுதப்பட்டுள்ளன. ஸ்ரீ ம. க. ஜயராம் நாயுடு அவர்கள் இதன் ஆசிரியராவர். இதன் வருடக்கிரயம் ரூபா 2. விலாசம் "செந்தமிழ்ச் சிந்தாமணி" ஆபீஸ், நம்பர் 16, கருப்பூர்முதலி தெரு, பெரிய மெட், சென்னை.

எமது பார்வைக்கு அனுப்பிய படத்தின்பொருட்டும் பத்திரிகையின்பொருட்டும் நன்றிகூறுகின்றேம்.

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சச்சிதானந்த ராஜயோகிகளின் முதலாநாட்பிரசங்கம்.

யோகிகள் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில், சமய குரவர் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய திவ்விய அதிமதுர அற்புத சரித்திரத்தைப் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கஞ்செய்ய ஆரம்பித்து, இலங்காதிபனாகிய இராவணன் கயிலாயகிரியை எடுக்கச் சென்று தேசோமயமாய் விளங்குகின்ற அத்திருமலையின்கீழ் அகப்பட்டு அநேக கற்பகாலம் வருந்திக்கொண்டிருந்தபொழுது அங்குச் சென்ற வாகீச முனிவர் இராவணனுடைய பரிதாப நிலையைக் கண்டு சகிக்கலாற்றாதவராகி, "கயிலாயபதி சாமகானப் பிரியன்" எனப்பாடிக்கொண்டு சென்ற சரித்திரத்தையும், அதனைக்குறிப்பாலுணர்ந்த இராவணன் சாமகானத்தினால் ஈசனைப் பிரியப்படுத்திப் பேறு பெற்றமையையும், தசக்கிரீவனுடைய துயரத்தைக்கண்டு சிவகாருண்ணிய மேலீட்டினால் இராவணனுக்கு உய்வழி காட்டியது போலப் பூலோகத்திலே உய்யும்மார்க்கமின்றி வருந்தும் சிவகோடிகள் ஈடேறும்பொருட்டு மண்ணுலகிற்சென்று பூமியிலுள்ளார்க்கு உய்வழி போதிக்கக்கடவாய் என, கைலாயபதியின் ஆஞ்ஞையின்படியே திருவாமூரிலுள்ள குறுக்கையர் குடியிலே வேளாளர்மரபிலே வாகீச முனிவர் மருணீக்கியார் என்ற நாமத்துடன் திருவவதாரம்செய்த சரித்திரத்தையும், திலகவதியாருடைய சரித்திரத்தையும், மருணீக்கியாரும் அவருடைய சகோதரியாகிய திலகவதியாரும் கல்விகற்ற திறமையையும் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் பிரசங்கம் செய்தார்கள். மருணீக்கியாருக்கு அன்னப்பிராசனம் செய்வித்தபாகத்தில் அன்னப்பிராசனத்திலுள்ளபலஅரியஇரகசியங்களையும், அவற்றால் நாம் எய்தக்கூடிய பெரும்பேற்றையும், இது இக்காலம் இங்கு அதி ஈனதசை அடைந்திருக்கிறதென்பதையும், தாவரபோசனத்தை ஈசனுக்கு அர்ப்பணம்செய்து உண்பதனால் நாம் பெருநன்மை அடைவோமென்பதையும்பற்றி அரிய சற்போதனைகள் புகட்டிப் பிரசங்கத்தை முடித்தார்கள்.

யோகிகள் எஞ்சியிருக்கும் அஃது சரித்திரத்தின் ஒருபாகத்தை, நாளை (வெள்ளிக்கிழமை) இரவு அஃது கல்லூரி மண்டபத்தில் பிரசங்கம் செய்வார்கள்.

### நாவலப்பிட்டி இந்துவாலிபசங்கம்.

இச்சங்கத்தின் சாதாரணக் கூட்டம் ஒன்று இந்த மாதம் 12௳ ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஸ்ரீ K. இராமச்சந்திரன் அவர்கள் "தமிழும் அதன் தற்கால நிலையும்" என்னும் விஷயமாய் ஓர் பிரசங்கம் செய்தனர்.

தமிழ்மொழி பிரபல்யமுற்றிருந்த, முத்தமிழ்ச் சங்ககாலங்களில், தமிழ் நாடு சோழ, சேர, பாண்டியதேசங்களென மூன்றுபிரிவினதாய், முடைய வேந்தர் மூவர்க்குரியதாய் தலைமை பெற்று விளங்கியதையும், தமிழ்நாட்டினருடைய ஒழுக்கத்தின் திறத்தையும், தமிழ் நாட்டினருடைய நாகரீகத்தையும், பாஷைஞானத்தையும், இனிய செந்தமிழ் நடையில் எடுத்துரைத்தனர். ஒவ்வோர்காலங்களிலும் தமிழ்நாட்டிற்கும், தமிழ்மொழிக்கும் நிகழ்ந்தமாற்றங்களைப்பற்றிப் பேசியபின், ஈற்றில் இவை தற்காலம் அடைந்திருக்கும் பரிதாப நிலையைப் பற்றி உரைத்தபோது சபையோர் மிக்க பரிதாபத்தோடும், அபிமானத்தோடும் கேட்டனர். இப்பரிதாப நிலையை அடைந்ததற்குக் காரணம் சமயாபிமான, தேசாபிமானம், பாஷாபிமானம் சாதியபிமானம் குன்றியமையே என்றும், இந்நிலையினின்றும் ஈடேற்றமடைந்து, தமிழ்நாட்டையும் தமிழ்ப்பாஷையையும் எங்கள் முன்னோர் காலத்திருந்த அந்நிலைக்குக் கொண்டுவரவேண்டுமாயின், தமிழ் மக்களாகிய நாங்களே அதன்பொருட்டு உழைக்கவேண்டியவர்களென்றும், எங்கள் மனம் வாக்குக் காயங்களைப் பயனில்லாத இந்திரிய விஷயங்களிலே செலவிட்டு மோசம் போகாமல் அவைமூன்றையும் நாட்டினது அபிவிர்த்திக்கும், பாஷையினது அபிவிர்த்திக்குமே அர்ப்பணம் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

பின்னர் ஸ்ரீ அ. இராசரத்தினம், ஸ்ரீ கா. சுப்பிரமணியம், ஸ்ரீ நா. த. சந்திரசேகரம், ஸ்ரீ மு. வேதவனம் முதலினோர் முறையே குறிப்புரை கூறினர். பின் அக்கிராசனர் பொழிப்புரை கூறினர். 8-30 மணியளவில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறிற்று. —கடிதம்.

### பிறசிவகருணை இல்லாதவர்கள் முத்தி பெறுவார்களா?

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

மாநில மீது மானுட யாக்கையை
எடுத்தவர் தமக்குள் பிறர் இன்னல்களை
அகற்றுதற் கெண்ணி அருஞ்செயல் புரியும்
வித்தகர் தம்மையே உத்தமர் என்பர்
ஆறுத லின்றி அகோராத் திரமாய்
நெற்றியில் வியர்வை சலத்தினிற் சிந்தப்
பலதொழில் புரிந்து பணத்தினை யீட்டித்
தானுண் ணுமலுந் தருமஞ் செய்யாமலும்
பொக்கிஷ சாலையில் பூட்டிவைத் திட்டு
அப்பொருள் எவ்விதம் அழியுமோ என்ற
கவலையி னாலே கருத்தூச லாடத்
தென்புலஞ் சேருஞ் சிதட ரானோரை
இருகால் விலங்கென யாவரும் எண்ணுவர்!
அவரைத் தாங்குதற் கவனிமா தஞ்சும்!
அளவிலாச் சீவர்க ளிடத்தினில் அன்பு
குன்றிய தீயோர் குரவர் ஆயினுமென்?
துறவிகள் ஆயினென்? தூயோர் ஆயினென்?
பாவலர் ஆயினென்? பண்டிதர் ஆயினென்?
சாதுக்கள் ஆயினென்? தனவந்தர் ஆயினென்?
இம்மை மறுமை இரண்டினும் அவர்கள்
கோதில்லன் னிலையுறல் குதிரையின் கொம்பே!
அத்தி யவரோ டன்புபூண் டிடினும்
தீமையே வந்து சேருதல் திண்ணம்!
பரசிவ கருணை பகுத்தறி வற்ற
விலங்கு பட்சியினும் விளங்கிடு கின்றதே?
தூயவக் குணமித் தூட்டர்க ளிடத்தில்
இல்லா ததினால் எதற்குவ மிப்பேம்!
பிறரிடம் நன்மை பெறவிரும் புதிரேல்
அவருக் கதையே அனுதினம் புரிமின்
தீமையே பிறர்க்குச் செய்திடு மொருவன்
மற்றையோர் தனக்கு வைகலும் நன்மை
செயவில்லை யென்று தேம்புவ தெவனோ?
கடவுள் எஞ்ஞான்றுங் கருணையும் நீதியும்
உடையர் ஆதலினால் ஒவ்வொ ருயிரையும்
நட்பும் பகையும் இன்றி நடாத்துவர்
அப்பர னிடத்தில் அருள்பெற விரும்புவோர்
அவர் சிருட்டித்த ஆன்ம கோடிகளில்
அளவுக் கடங்கா அனுதாப முற்று
தம்மக் களைப்போல் நடத்தா தவைகளை
அன்பிலா தென்றும் அடித்தும் உதைத்தும்
பார்க்கினுந் தோஷம் என்று பகர்ந்தும்
இப்படிச் சிலரை இம்சைகள் செய்தும்
உலப்பிலா வேறுபல் உயிர்வர்க் கங்களைக்
கலங்கித் துடிக்கக் கழுத்தினை அறுத்து
ஊனினைச் சமைத்து ருசியோ டருந்தியும்
இங்ஙன மாக இறைவன் படைத்த
உயிர்களுக் கிடுக்கண் உஞற்றி அப்பரனை
மூன்று காலமும் முழந்தாள் படித்து
கண்களை மூடிக் கருத்தினை அடக்கிச்
செபஞ் செய்திடலால் அப்பவந் தீருமோ?
மக்களைக் கொன்ற மாபாவி கட்கு
அப்பிள்ளை களின் பிதாவருள் செய்வனோ?
இரும்புத் துண்டினை அருந்தி இளைஞன்
சுக்குநீர் அதனைச் சுடச்சுடக் குடித்தால்
தீதுசெய் யாமற் சீரணம் ஆகுமோ?
செபஞ்செய் வதனாற் செய்த பாவங்கள்
திருமென் றுற்பகல் திருடர்கள் போலச்
சாமிகள் என்றும் சாதுக்கள் என்றும்
துறவிகள் என்றுஞ் சொல்லி நடித்துப்
பகல்வேடம் பூண்டு பாசாங் கியற்றிக்
கன்னியர் தங்கள் கற்பினை அழிக்கும்
குணநலம் இல்லாக் குடிகேட ருக்கு
வனமெலாம் உழுதிடும் வராகம் இடத்தினில்
கூரிய கொழுவைக் கொடுத்தல் ஒக்குமே?
அர்ச்சிய சீவரில் அனுதாப முற்று
நற்செயல் புரிந்து நடுநிலை யோடு
ஒழுகும் பெரியோர் ஒருகாலத் தும்
பொய்ச் செபஞ்செய்து பூதலம் வியக்கக்
கண்களை மூடிக் கடவுள் இடத்தில்
மன்னிப்புக்கேட்டு வாய்ஞானம் பேசிப்
பீடுமோக்ஷம் பெற்றிட நினையார்
எசமான் வேலையைச் சரியா யியற்றாக்
கள்வரே அவரைக் கண்ட வுடனே
செப்புவே லைகளொ லாஞ் சிரத்தையி னோடு
செய்தவர் போலச் சிற்சில காலம்
புரிந்துநின் றுருப்பு வார்த்தைகள் புகன்று
மன்றாடி அவரை மன்னிப்புக் கேட்பர்
இவர்கள் பாசாங்கை எம்பிரான் அறிவர்
ஆதலால் எமது அன்பரே கேண்மின்
இம்மைச் சுகங்களை விரும்பி ஈசன்பால்
அன்பு செலுத்தி அருஞ்செபஞ் செய்து
வாணா ளெல்லாம் வறிதே போக்காது
நிட்காம பத்தியாய் நிதமும் அவரை
ஐம்புலன் களையும் அடையுடன் அடக்கி
எந்த நேரமும் இடையீ டின்றிச்
சங்கரன் பாத தாமரை களிலே
அனுப்புதல் அற்ற ஆர்வஞ் செலுத்தி
நித்தி யானந்த முத்தி எய்துதிரே.

## க டி த ம்.

### சனப்பிரதிநிதித் தெரிவு.

'அடம்பங்கொடியுந்திரண்டால்மிடுக்கு' என்னும் முதுமொழிக்கொப்ப நாம் இவ்வுலகில் ஒற்றுமையாய் வாழ்வதே மேன்மை. இக்கலியில் அநேகமாய் ஒவ்வொருவரின் புண்கண்களில் நன்மை செய்பவன் தீமையையும், தீமை செய்பவன் நன்மையையும் அனுபவிப்பதாய்க் காணும். ஆனால் உண்மையில் அதனதன் பயனை இறுதியில் அவரவர்கள் அனுபவிப்பார்கள் என்பது திண்ணம். (அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்.)

ஐயன்மீர், ஊரவர்களின் ஈடேற்றத்தை யுன்னித் தேசாபிமானம் பூண்ட எங்கள் சனத்தலைவர்கள் எங்கள் நாடாகிய வடமாகாணத்துக்கு ஐந்து பிரதிநிதிகளை அரசாட்சியாருடன் வாதாடிப் பெற்றார்கள் அதற்கு நாம் அரசாட்சியாருக்கு நன்றியறிதல் பாராட்டவேண்டியது. அப்படியே எங்கள் தலைவர்களைத் தெரிதல் வோட்டர்களின் கடமையாதலால் வெளிவந்தவர்களில் சிலரையே தெரிவுசெய்தார்கள். ஆனால் எல்லோரும் நற்குணமுடையோராயினும் தேவையுள்ளது ஐந்து பேர் தானே. ஆனபடியால் தெரிவு செய்யப்படாதவர்கள் மனச்சஞ்சலமுறுவது சகஜம். அபிமானிகள், அறிவுடையோர்கள் சஞ்சலமுறமாட்டார்கள்.

பிரபுக்களே, முதுமையும் உலகஞானமும் உள்ள மனிதர் இருக்கும்பொழுது அனுபவமில்லாத சிறுவரைச் சட்டநிருபணசபைக்குத் தெரிவு செய்தார்களே என்று நாம் கண்தோற்றத்தில் தீர்மானித்து விடப்படாது. கடுகு சிறிதாயினும் காரம் பெரிதாகும்.

இன்னும் பெரியோர்களாய், ஞானத்தில் தேர்ந்தவர்களாய் உள்ளவர்கள் தாங்கள் மாத்திரம் இப்படிப்பட்ட சபைக்குப்போய்ச் செப்புக்காசுபெறாத வெறும் பட்டத்துக்குப் பிரயாசைப்படக்கூடாது. சிறியோராயுள்ள தங்கள் பிள்ளைகள்போன்றோரை இப்படிப்பட்ட சபையிற் பயிலுவித்துத் தெரியப்பட்டவர்களுடன் எல்லோரும் (அத்துடன் பிரதிநிதிகளாய்வரப் பிரயாசைப் பட்டு நன்மை பெறாத பெரியோரும்) தங்கள் சகோதரப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து பொதுசன நன்மைக்கும் தங்கள் தங்கள் சந்ததிகள் தழைத்தோங்கிவரவும் பிரயாசைப் படுவார்களாக.

என்மனதின் தூண்டுதலினால் என் சிற்றறிவுக் கெட்டியதை எழுதினேன். அறிவாளிகள் குற்றம் குறையிருப்பின் பொறுப்பது கடமை.

இப்படிக்கு,
மலாய்நாட்டில் வசிக்கும் இலங்கைமாதாவின்
புத்திரன்.

### இஃதென்ன பேடித்தனம்.

சிங்கைநகர் தேங்குரோட்டில் எழுந்தருளியிருக்கும் தெண்டாயுதபாணி ஆலயத்தில் வருஷாவருஷம் தைப்பூசமஹோற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. தைப் பூசதினத்தின் முதனாள் சர்வலோகரக்ஷகராகிய சிவசண்முகப்பெருமானை, வெள்ளி இந்திர விமானத்தில் ஆரோகணிக்கச்செய்து, விக்னேஸ்வராலயஞ்சென்று பின் அன்று மாலை, செட்டித்தெரு வீதிவழியாகப் பவனிவந்து, ஆலயம் புக்கு ஊஞ்சலில் அமரச்செய்யுமித்தகைய இன்பரச விழாவைப்பார்ப்போர் ஆனந்தபரவசமடைவரென்பது திண்ணம். அடுத்த நாளாகிய தைப்பூசதினத்தன்று மேற்படி ஆலயத்தில், காலை எழுமணிமுதல், மாலை எழுமணி வரையும், நேர்கடன்செய்யும் அடியார்களின் கோஷ்டமும், பாற்காவடி, செடிற்காவடி, இரதக்காவடி, விமானக்காவடி, ஆட்டக்காவடி முதலியன எடுப்போர் தம்மைமறந்து குகனைத் தத்தித்திரித்து நடனம்புரியும் அற்புதமும், குகப்பெருமானின் திருமுகக்கருணை விலாசத்தைக் கண்குளிரக்கண்டதினால் வருவதாகிய

ஆனந்த பரவசத்தின் பிரவாகமும், ஆலயத்தினுள்ளும் புறத்தும் அடியார்களுடைய வாக்கினின்றுமெழுகின்ற "அரகர" என்னும் பேரொலியும், எத்தகைய கல்மன அடையவரையும் நெக்குவிட்டுருகச்செய்யுமென்றால், மற்றியார்தான் அதன்பெருமையை யுணரு நீர்மையர். இத்தகையமகிமைவாய்ந்தஆலயத்தில்இராஎழுமணிமுதல் பன்னிரண்டுமணிவரையும் ஆங்கிலேயராகும் வெள்ளையர்களையும் சட்டைதொப்பிக்காரரையும் அழைப்புப்பத்திர மூலமாக அழைத்து அவர்களைச் சப்பாத்துடன் கோவிலுக்குட் பிரவேசிக்கச் செய்வதோடு, அவ் வெள்ளையர்களுடைய தயவை வேண்டிப்போலும், சில செட்டிப்பிள்ளைகள் சுவாமிக்கு அதி சமீபத்திற் கொண்டுபோய்க் காண்பிக்கின்றார்கள். இவ்வெள்ளையர்கள் அங்கு சென்றதும் தாங்கள் மேலுலகத்திருந்து வந்தவர்களைப்போல கிளேந்தோ, வதியேம், தசையிலா வெண்மைச் சுணங்கன் சவ்வினமாதிரியாய்த் தமது வாயிலுள்ள சுங்கானைப் புகைத்துக்கொண்டும், சிவபூசைக்குட் கரடி புகுந்தமாதிரியாய், சுசரசந்நிதானத்தை அசுசிப்படுத்தி விடுகின்றனர். இவர்கள் இப்படிச்செய்வதினால் பக்தகோடிகளின் மனம் எவ்வாறுருகுமென்பதை யுண்மையறிவாளருணரக்கடவர். உள்ள பக்தியையும் கொள்ளைகொள்ளக்கூடிய விதமான இழிவான இக்காரியத்தை, கடவுள்வழிபாட்டில் மற்றையோரினும் மேம்பட்ட, இச் செட்டிப்பிள்ளைகள் கையாண்டுவருதல், சிச்சீ, எவ்வளவு அறியாமை. இதை யாரும் எடுத்துரைக்கப்போனால், அவர்கள் அதற்குப் பதிலுத்தரமாகத் தாங்கள் பிராயச்சித்தஞ்செய்கிறோமென நியாயத்தை எடுத்தாளுகின்றார்கள். என்னே இவர்களுடைய மூளையின் மௌட்டிகம். ஆனால் இவர்கள் தாங்கள் பிராயச்சித்தஞ் செய்விக்கிறோமென்கிறார்கள். அப்படிப்பிராயச்சித்தம் செய்வித்தற்குக் காரணமாயுள்ள குற்றத்தை யறவேயொழித்துவிட்டால் பிராயச்சித்தமெற்றிற்கு. வெள்ளையர்களின் தயவுக்காக, அறிவிலாதவர்களாலும் உபேட்சிக்கத்தக்க இக்காரியத்தைச் செய்யும் செட்டிப்பிள்ளைகளின் அறிவுக்கு எதைத்தான் உவமைசொல்லலாம். வெள்ளையர்களின்தயவு வேண்டுமானால் ஈசரதிக்கைக்கொப்பான இக்காரியத்தையா செய்யவேண்டும்? தங்கள் உலகவாழ்க்கைக்குரிய பொருட்களி லேதேனுமொன்றைக் கொடுத்து அவர்களின் தயவைப்பெறுதல் சுலபமானதொன்றேயன்றோ! புகழின் நோக்கங்கொண்டு செய்யுமிவர்களின் கூர்த்தமதிக்கு நிகழுமிழிவைச் சிந்தியாதிருப்பது விந்தையே. இவற்றினைக்கண்டித்து நல்வழிப்படுத்தக் கற்றறிந்த மூதறிவாளர் இல்லையா? ஒரு சமையம் இம்பர்போற்றும் கம்பராலுபேட்சிக்கப்பட்டவர்களென்றுமூதறிவாளர்மௌனஞ்சாதிக்கின்றார்களா? அல்லது இச்செட்டிவர்க்கத்தாருள் படித்த அறிவாளிகளில்லையா? சைவசமயம் மகா விசேடமுடைத்தென்று இதரசமயத்தவர்களாலும் விதந்துபேசப்படுவதின் காரணம் ஆலய வழிபாட்டினாலேயாம். அத்தகைய ஆலயவழிபாட்டிற்கு நேர் விரோதமானவும் சமயத்துரோகமானதுவுமாகிய செயலை, அறியாமைகாரணமாகச் செட்டிப்பிள்ளைகள் கைக்கொண்டிருத்தலால் அவர்கள் அதை நீக்கும் வரையும் கல்வியினாலும், அறிவினாலும், கடவுட்டியானத்தினாலும், மேம்பட்ட பக்தசிரோன்மணிகள், நற்புத்தி புகட்டிவருவதோடு, இவ் விஷயத்தை மற்றும் சகோதரபத்திரிகைகளிலும்பிரசுரித்து நல்வழிப்படுத்துவார்களாக.

இங்ஙனம்
பரசமயகோளரியாராகுஞ்
சீர்காழிப்பிள்ளையாரது பாதநூனியைச்
சிரமேற்கொண்ட புகலியர்கோன்,
25-9-24. சிங்கைநகர்.

## மாணவ தருமம்.

பரமாசாரியனாகிய பகவானது திருவருளால் மாணவதர்மத்தி னமைப்பாகவே இவ்வுலகம் பொருந்தியிருக்கின்றது. சிறிது வென்றி நோக்குவார்க்கு இது வெள்ளிடைமலையாம். இதற்குப் போராதாரம் கல்வியேயன்றிப் பிறிதொன்றின்று. இத்தகைய கல்வியின் மயமாய் விரிந்துள்ள உலக நூலையும் அறிவு நூலையும் வரன்முறை வழியில் நின்று உய்த்துணர்ந்து உயர்தரப் பதவியை யடைதற்குரியவர் மக்களே. ஆதலினன்றோ பெரியார் மக்கட்பிறவியைப் பெறலரும் பேற்றி லொன்றாகக் கருதியுள்ளார்.

பல பிறப்புக்களினின்றுந் தப்பி மனிதசென்மத்தை யடைவது, வடகடற்க ணிட்டதொரு நுகத்தடியைத் தென்கடற்க ணிட்டதொரு கழியானது தேடிச்சென்று சந்தித்து, அத்தடியினிடத்துள்ள துளையைக் கண்டுபிடித்து, அந்தத்துளையின்மத்தியில் நுழைந்ததுபோலும் அருமை வாய்ந்தது. அவ்வாறடையும் மனிதசென்மமும் அயோக்கியமும் அசௌகரியமும் பொருந்திய பிறதேசங்களி லுறுமல் சீர்வளங்கொண்ட நல்ல தேசத்திற் பெறுவது அதனினும் அருமையாம் இவ்விரண்டுங் கைகூடியவிடத்தும், அநாசாரங்களை மேற்கொண்ட இழிவான குலத்தை விட்டுப் பாரம்பரியமாக வரும் சதாசாரத்தோடு கூடிய நற்குலத்தில் அச்சென்மத்தை யடைவது பின்னும் அரிதாம். இவ்வளவு அநுகூலமாயும், அநாதியாகப் பற்றியுள்ள வினை பி னடியாக வரற்பாலனவாகிய அங்கப்பழுது முதலிய குறைபாடுகளின்றிச் சுகவடிவோடு செனமங்கிடைப்பது மிகவும் அரிதாம். அத்தகைய சுகப்பிறவி யெய்தினும், வரன்முறைவழியிலிருந்து, கற்கவேண்டிய உறுதிப்பொருளை ஐயந் திரிபறக் கற்று, சுயகலத்திற்கும் பொதுநலத்திற்கும் வேண்டிய வியவகாரங்களை நடுநின்று கவனித்துப் புகழொடு விளங்குவது யாவற்றினும் அரிதாம்.

இத்துணை யருமையை எளிமையாக்கி எடுத்த நமது நற்பிறப்பை எவ்வழியிற் பயன்பெறச் செய்துகொள்ளவேண்டுமோ அவ்வழியை நாம் நாடாது கைவிடின், நமக்கும் பிறவுயிர்க்குமுள்ள வேறுபாடுதான் யாது?

"தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்களும் விலங்கே"

என்றல்லவோ நம்மை மதிக்க நேரும். இந்த மதிப்பிற்கு இடந்தராதபடி, முன்னோர் தம் பொருளாகிய தம் மக்களை அறிவறிந்தவர்களாக்கப் பூர்வத்தில் தக்க வயதில் குருகுலவாசஞ் செய்துவர விட்டிருந்தனர்.

குருவானவர் அவர்களை நல்வழிப்படுத்த, 'வித்திடுவதன்முன் நிலத்தைச் சீர்திருத்துவது' போல அவர்களுக்கிருக்கும் தற்போதத்தைப் போக்கப் பற்பல குற்றேவல்களைச் செய்யச் செய்வர். பக்குவநிலை யடைந்ததும் கல்வியிற் பழக்குவார். இப்படிப் பகவானே கிருஷ்ணாவதாரத்தில் சாந்தீபினி யென்னும் குருவினிடம் அநேககுற்றேவல்களைச் செய்துள்ளார்.

அக்காலத்தில் மாணவரும் நன்னூலிற்கூறிய விதிகளின்படி குருவிசுவாசிகளாய் நடந்துவந்தனர். (அவன் பக்கல் கிரமப்படி போய்வந்தனை வழிபாடு செய்வதில் மனவெறுப்பின்றிச் செய்து ஆசிரியனுடைய குணநிசங்களிற் பழகி அவன்கருத்தைக் குறிப்பாலறிந்து நெருங்குவார்; அவன் இருவென இருந்து, பாடஞ் சொல்லெனச் சொல்லிப் பசியுள்ளவன் அன்னத்தையுட்கொளுவதுபோலப் பாடத்தை யுள்ளத்தேற்பர்; மற்றும் பதுமைபோலமர்ந்து, செவி வாயாகவும், மனம் வயிறாகவும் கேட்ட பொருள்களை மனத்திருத்திப்போவென நீங்குவர்) குருவின் கோபத்திலும் நன்மையுண்டென்பதை, அனுபவவாயிலாய் ஒழுகியுணர்ந்தனர்: இல்லிக்குடம், ஆடு, எருமை, பன்னாடை என்பவற்றின் குணத்தையொத்த கடைமாணாக்கரின தானத்தையும், மண்ணுங் கிளியும்போன்ற இடைமாணவர் தானத்தையும் அடையக்கூடாதென்கிற நோக்கத்தில் ஊக்க மிக்கவராய்ப் பெரும்பான்மையும் அன்னப்பறவைபோலவும் பசுவைப்போலவுமிருந்து சகல வித்தையையும் விபரீத சந்தேகமற ஓதினர்; அன்றியும்,

"இதவிய வியற்றிய குரவர் யாரினும்
மதவியல் களிற்றினாய் மறுவில் விஞ்சைகள்
பதவிய விருமையும் பயக்கப் பண்பினால்
உதவிய ஒருவனே யுயரு மென்பரால்"

○ஐந்தாசிரியரிற் சிறந்தவர் வித்தியாகுரவரேயாம். அவரால் மாணவர் இவ்வைவரின் தருமங்களையும் நன்குணர்ந்து தாம் அவர்கள் திறத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைமைகளையும் தெள்ளிதி னறிந்தவராவரன்றோ? அவ்வுயர்வு வித்தியாகுருவிற் குரியதே. நடுநிலை வாய்ந்த ஆங்கில வல்லரசிலும் பல வித்தைகளுக்கேற்ற கல்வி போதித்துவரப்படுகிறது. பலர் அக்கல்வியில் தேர்ச்சியுற்று நல்ல பதவிகளி லிருக்கின்றனர். நமது காருண்ணிய அரசாங்கத்தார் சுதேச பாஷையாகிய தமிழைத் தமது பாடசாலைகளில் முக்கியபாடமாக வைத்திடின் மாணவர்கள் அதையுங் கௌரவித்துச் சுதேசாபிமானத்தை வளர்த்துவருவர். இவ்வாறில்லாக் குறையால் அந் தீந்தமிழ் மாணவர் சிலரால் இகழப்பட்டு வருகின்றது ஆனால் தற்போது பற்பல பிரசுரங்கள் வாயிலாக, சுதேச பாஷாபிமானம் வற்புறுத்தப்பட்டு வருவதால் இக்குறையுங் கழிந்துகொண்டே வருகிறது. நிற்க, மக்களாய்ப் பிறந்தார்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்னும் தமிழ்வேத வாக்குகளுக்கிணங்கி நிற்க வேண்டியிருத்தலின், அன்றோர்,

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்றபடி இறக்குந்துணையும் மாணவப்பதவியிலிருந்தே எல்லா வித்தைகளையும் பெற்று மேம்பாடடைய முயலவேண்டுவது அத்தியாவசியமாகின்றது.

'எய்தற்கரிய யாக்கைதனக் கெய்திற்றென்றுலதுகொண்டு, செய்தற்கரிய வறங்கள் பல செய்து துயர்கூர்பிறவியின், றுய்தற் கொருமை பெறவொண்ணா துழல்வோ ருடம்பு பொற்கலத்திற், பெய்தற் குரியபால் சுமரிற் பெய்ததொக்கு மென்பரால்"

என்பதற்கு நாம்இடந்தராது குருபத்தியுடையவராய்க் கற்கத்தக்கவற்றை விதிப்படி கற்று, கற்றவண்ணம் நின்று, நமக்கும் பிறர்க்கும் பயன்பட நடந்து, இகபரசுகங்களுக்கு யோக்கியராய் வாழ்வோமாக.

செந்தமிழ்ச் சிந்தாமணி.

○ ஐந்தாசிரியர்:—கடவுள், அரசன், ஞானாசிரியர், வித்தியாகுரு, பெற்றோர்.


## விளம்பரம்.

### அறிவித்தல்.

1925ஆ மாசிமாசத்தில் மறிச்சுக்கட்டியில் நடக்கவிருக்கும் முத்துக்குளிப்பிற்கு வேண்டிய கட்டிடங்களில் ஸ்லேபெறில்லாத கட்டிடங்களைக் கட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பலாமெனபதை அறிந்துகொள்க.

விபரங்களை ஐப்பசிமீ 17உ யில் வெளிப்பட்ட அரசாட்சியாருடைய கசறபத்திரிகையிற் பார்க்கலாம் அல்லது என்னிடத்திற கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

எவ். கே. ஸிமித்,
வடமாகாண அரசாட்சி,
ஏசன்றர்.

யாழ்ப்பாணக்கச்சேரி,
1924ஆ ஐப்பசிமீ 18உ.
(G. 438.)

### அறிவித்தல்.

நீர்வேலி பூதத்தம்பி சின்னத்துரை ஆகிய நான் வெளிப்படுத்துவதாவது எனது சகோதரன் நீர்வேலி பூதத்தம்பி சிதம்பரப்பிள்ளை யென்பவர் எனது பணத்தைக் கொடுத்து காணும் குறித்த சிதம்பரப்பிள்ளை யென்பவரும் ஒருமித்தேனும் தனித்தனியேனும் அறவிடுவதாகக்காட்டி யெழுதிய ஈட்டுறுதிகளிற் குறித்த சிதம்பரப்பிள்ளை யென்பவர் தனக்குரிய உரித்தை 1924ஆ புரட்டாதிமீ 25உ நொத்தாரிஸ் சின்னத்தம்பி கந்தர் முகதாவில் 155,9-ம் இலக்கத்தைக்கொண்ட உறுதியால் அழித்து விட்டபடியால் எனக்கு இறுக்க வேண்டிய கடன தொகைகளை இனிமேற் குறித்த சிதம்பரப்பிள்ளையென்பவரிடங் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளக் கூடாதென்பதை யெனது கடன் காரருக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

நீர்வேலி வடக்கு,
பூ. சின்னத்துரை.

(Mis. 547.)

1924-ம் வருஷைப் புனா இண்டியன் இண்டஸ்ட்ரியல் கண்காக்ஷியில் முதல் தரமாக யோக்கிதா பத்திரம் பெற்றது.

# இளமையும் பலமும்

# வீரமும் வன்மையும்,

# காமகேசரி

என்னும் வீரிய விர்த்தி மாத்திரைகளினால் ஒரே மணி நேரத்தில் உண்டாகும் வீரமற்ற இளைஞரும் பலங்குன்றிய வயோதிகரும் சிற்றின்ப சுகம் அடைய இதுவே மருந்து.

20 மாத்திரைகள் ரூபா. ஒன்று 1.

காமகேசரி பார்மஸி
412. (R) தங்கசாலைத்தெரு.
(Y. 37) சென்னை.

# ஸ்ரீஜபுஷ்ப

பிரபஞ்ச சுகத்திற்கு திவ்விய ஔஷதம்! 2 மணிநேரத்தில் அபூர்வ குணம்!!

இந்த மருந்து இராத்திரிவேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீர்த்துப் போயிருந்தாலும் அதைக் கெட்டிப்படுத்தி 2 மணி நேரத்திற்குள் அதிகமான ரதி சக்தியைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்ய நஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவறாமல் கட்டுப்படுத்தும். இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் தாதுபலத்தினாலுண்டாகும் நபுமஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக்கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒருமுறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரியவரும். கடிதங்கள் ரகஸ்யமாய் வைக்கப்படும். 20 மாத்திரைகள் கொண்ட சிசா 1-க்கு ரூபா 2—0—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு.

ஆர்ய வைத்தியாஸ்ரமம்,
38. (H) பைராகிமடம் கோவில்வீதி,
(Y. 33) ஜி. டி. மதராஸ்.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய

# அரைக்கீரை விரைத் தைலம்.



### இதன் குணம்.

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனாற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காதிரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் நீக்கி அனுகூலப்படுத்தும் மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்துஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேச் பிரத்தியேகம் வெளிநாடுகளுக்கு வீ. பீ. இல்லாததால் முற்பணம் அனுப்பவேண்டும்.

வி: எஸ் கோமளத்தம்மாள்,
மானியுபாக்சுரார்,
(Y 26) 8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

புதிய சரக்கு. சரச விற்பனை.

## தங்கமெடல்கள் பெற்ற இந்திய ஜவுளி வியாபாரிகள்.

எங்களிடம் மதுரை, கராச்சி, பனாரஸ், பெங்களூர், சொர்நாடு, கும்பகோணம், காஞ்சிபுரம், சேலம் இன்னும்மகேசலூர் ஜவுளித்தினுசுகள் பட்டு ஜரிகைகலந்ததும், சாதாநூல்கலந்ததுமான சேலைகளும், 12 முழம தாவணிப் பாவாடை, ரவிக்கைகளும், கல்கத்தா நார்மடிகைகளும், வேஷ்டிகளும், புதுச்சேரி சேலை, தாவணி, துண்டுகளும், 150×200-ம் நம்பர் நூல்களில் வெள்ளை, பலகலர்களில் ஜரிகை கலந்த சேலைகளும், 12 முழம் தாவணிகளும், 6 முழம் துப்பட்டா (சால்வை) (6-7-8 10×6) முழம் மடிகளும் ஏராளமாய் இருக்கின்றன. ஒருதடவை ஆடர்கொடுத்தால் நயம் தெரியவரும்.

வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலம் அனுப்பப்படும்.

டி. ரெங்கசாமி அய்யர் அன்சன்ஸ்,
ஜவுளி வியாபாரிகள்,
கீழ்வெளி வீதி, மதுரை.

கிளைகள்:—மேலகோபுர வாசல், மதுரை.
16 A. அய்யாபிள்ளை தெரு, P. T.,
சென்னைபட்டினம்.

(ஜவுளி விலை ஜாபிதா இனாமாய் அனுப்படும்.) (Q. 52)

## தீபாவளி! தீபாவளி!!

தமிழ்த்தேசத்தவர்களுக்குத் தீபாவளிப்பண்டிகை வருஷத்தில் ஒரு முக்கியமானபண்டிகையாகும். அந்தச்சமையத்தில் அலங்காரமான காசிப் பட்டுப்புடவை ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள். தீபாவளிக்கு அநேக புதுமாதிரியான புடைவைகள் வைத்திருக்கிறோம்.

### கோல்டு மெடல் புடவை.

உடல் சாதா; விளிம்புக் கரைகளுக்கு உயர்ந்த சரிகைக்கரையும் முகதலையுமுள்ளது. பல கலர்கள். இந்தப் புடவைக்குத் தங்கப் பதக்கமும் மைசூர் கவர்மெண்டாரால் கொடுக்கப்பட்டது.
16 முழம் + 44" விலை ரூபா 38, 40, 50, 54.

### ஜரிகை கொட்டடிப் புடவை.

16 முழம் விலை ரூபா 38, 40, 45, 50, 55, 60, 80.
கேட்லாக் இனாம்.

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.
(Y. 29.)


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed andPublished by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.